Arimaa Nokku Journal
(UGC Care Group-I Journal)
ISSN: 2320-4842
Vol-18 No. 02 April-June 2024

# திருவிவிலியத்தில் இயேசு நிகழ்த்திய அரும் அடையாளங்களில் புலப்படும் அறம்

**ந.ஆ. வேளாங்கண்ணி,**

உதவிப்பேராசிரியர்,

தமிழ் முதுகலை மற்றும் ஆய்வுத்துறை,

தூய நெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி), திருப்பத்தூர் – 635 601,திருப்பத்தூர் மாவட்டம்.

---

## முன்னுரை

இயேசுவின் இறையாட்சிப் பணியில் போதனைகளும் அரும் அடையாளங்களும் இடம்பெற்றன. ஆனால் மக்கள் அனைவரும் அரும் அடையாளங்களைக் கண்டே அவரின் போதனைகளுக்குச் செவிமடுத்தார்கள் எனலாம். ஆக மக்கள் மத்தியில் அரும் அடையாளங்கள்தான் முதலிடம்பெற்றன. இதன் அடிப்படையில் மத்தேயு, மாற்கு, லூக்கா, யோவான் ஆகிய நான்கு நற்செய்தி நூல்களை ஆய்வுக்குட்படுத்தும்போது இயேசு பல அரும் அடையாளங்களை நிகழ்த்தியுள்ளார் என அறியமுடிகிறது. அவை எத்தகைய அரும் அடையாளங்கள்? அவைப் புலப்படுத்தும் அறம் என்ன? இதுபோன்ற கேள்விகளின் அடிப்படையில் இக்கட்டுரையானது ஆராயப்படுகிறது.

## அரும் அடையாளங்களின் விளக்கம்

அரும் அடையாளம் என்றால் என்ன? இந்த வினாவிற்கு இங்கு சிலரின் வரையறைகள் சான்றாக அமைந்துள்ளன. **"இயற்கை நியதிகளுக்கு அப்பாற்பட்டவை புதுமைகள் என்று புனித அகுஸ்தீனாரும் எல்லா இயற்கைச் சக்திகளும் மேலானவை புதுமைகள் என்று புனித தாமஸ் அக்குவினாசும் விளக்கம் தந்துள்ளனர்"**[1] எனவும்,

**"புதுமை என்றால் அது ஒரு வல்ல செயல் கடவுளே புரிகின்ற ஒரு அதிசய செயல். நம்மில் ஆச்சிரியத்தையும் அதிசய உணர்வையும் எழுப்பவல்ல செயல்கள் கடவுளால் செய்யப்படும்போது அவை புதுமைகள் அற்புதங்கள் என்று அழைக்கப்படுகின்றன"**[2] என்றும்,

**"கடவுள் படைத்த இயற்கைக்கு சில விதிமுறைகள் உண்டு. இந்த விதிமுறைகளுக்கு அப்பாற்பட்டு சில நிகழ்வுகள் நடக்கும் போது அவை புதுமைகள் எனக் கருதப்படுகின்றன"**[3] ஆகவே, **"புதுமையை ஓர் அடையாளம் என்றோ அருங்குறி என்றோ அரும் அடையாளம் என்றோ நாம் அழைக்கலாம்"**[4]


 ISSN: 2320-4842
Vol-18 No. 02 April-June 2024

இவ்வகையில் அரும் அடையாளங்கள் என்றால் புதுமைகள் என்றும் கூறலாம். புதுமை என்னும் சொல்லுக்கு **"புதிய தன்மை, இதுவரை இல்லாதது, எழில், பழக்கமின்மை, அதிசயம்"**[5] என்று தமிழ் - ஆங்கிலப் பேரகராதி விளக்கம் அளிக்கிறது.

இந்நிலையில் ஐம்பூதங்களுக்கு அப்பாற்பட்டு நடக்கின்ற ஒரு செயலை ஐம்புலன்களால் உணர்ந்து நம்பிக்கையின் அடிப்படையில் புரிந்துகொள்வதே புதுமை அல்லது அரும் அடையாளம் எனப்படுகிறது. இதன் அடிப்படையில் திருவிவிலியத்தை ஆராயும்போது, நான்கு நற்செய்தி நூல்களில் சுமார் 35 அரும் அடையாளங்களை (புதுமைகள்) இயேசு நிகழ்த்தியுள்ளார் என்பதை அறியமுடிகிறது.

**அரும் அடையாளங்களின் வகைமைகள்**

இயேசு நிகழ்த்திய அரும் அடையாளங்களை ஐந்து நிலைகளாக வகைமைப்படுத்தலாம். இவை கீழ்க்காணும் வரைபடத்தின் மூலம் விளக்கப்படுகிறது.




இவ்வாறு வகைமைப்படுத்தப்பட்டுள்ள அரும் அடையாளங்களில் உணவு சார்ந்த அரும் அடையாளங்கள் மட்டுமே இக்கட்டுரையில் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகின்றன.


**உணவு சார்ந்தவை**

தனிமனிதனுக்கு உணவு இல்லையென்றால் ஜகத்தை அழித்திடுவேன் என்றார் பாரதி. பசி என்று வந்தவனுக்கு புசி என்று ஒரு கை கொடுத்துப் பாராப்பா என்றான் பாரதிதாசன். பசியைப் போக்க சத்திய தருமசாலையைத் தொடங்கி அணையா அடுப்பு மூட்டி அனைவருக்கும் உணவு வழங்க வழி செய்தவர் வள்ளலார். இதன் காரணம், எல்லா உயிரினங்களுக்கும் உணவு இன்றியமையாதது என்பதாகும். உணவுக்கும் உடலுக்கும் உடலினுள் இருக்கும் உயிருக்கும் நெருங்கிய உறவு உண்டு. நன்கு உண்ணவில்லை

என்றால் உடல் மெலிந்து உயிர்க்கு பேராபத்து உண்டுபன்னுகின்றது. ஆகவே உடலையும் உயிரையும் பேணிக்காத்திட உணவு அவசியமாகிறது.

இதையும் தாண்டி, உணவின் இன்னொரு முக்கிய அம்சம் மனித உறவை வளர்க்கிறது எனலாம். எங்கெல்லாம் உறவு இருக்கிறதோ அங்கெல்லாம் உணவு உண்ணும் நிலை உருவாகிறது. இதிலிருந்து உணவுக்கும் உறவுக்கும் உள்ள நெருக்கத்தை அறியமுடிகிறது. **"உணவின் சுவை பசியின் அளவில் அல்லவா இருக்கிறது. பரிமாறும் பரிவில் அல்லவா முடங்கியிருக்கிறது"**[6] என்பது நிலைநாட்டப்படுகிறது.

இத்தகைய இரு அம்சங்களை நன்கு உணர்ந்த இயேசு, தன்னைத் தேடி வரும் மக்களுக்கு உணவளித்தார். இதன் விளைவாக நிகழ்ந்தவைதான் உணவு சார்ந்த அரும் அடையாளங்கள் எனலாம். இவற்றை ஆராயும்போது மூன்று அரும் அடையாளங்கள் உணவு சார்ந்தவையாகக் காணப்படுகின்றன. இவற்றைக் கீழ்க்காணும் வரைபடம் விளக்குகிறது,




**கானாவூர் திருமணம்**

கானாவூர் திருமணம் என்னும் அரும் அடையாளம் யோவான் நற்செய்தியில் மட்டுமே இடம் பெற்றிருக்கிறது. இத்திருமணத்திற்கு இயேசுவும் அவருடைய தாய் மற்றும் இயேசுவின் சீடர்களும் சென்றிருந்தனர். திருமண விழாவில் திராட்சை இரசம் தீர்ந்துபோகவே இயேசுவின் தாய் அவரை நோக்கித் திராட்சை இரசம் தீர்ந்து விட்டது என்றார். இயேசு அவரிடம் அம்மா அதைப்பற்றி நாம் என்ன செய்ய முடியும்? எனது நேரம் இன்னும் வரவில்லையே என்றார். இயேசுவின் தாய் பணியாளரிடம் அவர் உங்களுக்குச் சொல்வதெல்லாம் செய்யுங்கள் என்றார்.

யூதரின் தூய்மைச் சடங்குகளுக்குத் தேவையான ஆறு கல்தொட்டிகள் அங்கே இருந்தன. அவை ஒவ்வொன்றும் இரண்டு மூன்று குடம் தண்ணீர் கொள்ளும். இயேசு

அவர்களிடம் இத்தொட்டிகளில் தண்ணீர் நிரப்புங்கள் என்று கூறினார். அவர்கள் அவற்றை விளிம்புவரை நிரப்பினார்கள். பின்பு அவர் இப்போது மொண்டு பந்தி மேற்பார்வையாளரிடம் கொண்டுபோங்கள் என்று அவர்களிடம் கூறினார்.

பந்தி மேற்பார்வையாளர்கள் திராட்சை இரசமாய் மாறியிருந்த தண்ணீரைச் சுவைத்தார்கள். அந்த இரசம் எங்கிருந்து வந்தது என்று அவருக்குத் தெரியவில்லை. தண்ணீர் மொண்டு வந்த பணியாளருக்கே தெரிந்திருந்தது. ஆகையால் பந்தி மேற்பார்வையாளர் மணமகனைக் கூப்பிட்டு எல்லாரும் நல்ல திராட்சை இரசத்தை முதலில் பரிமாறுவர் யாவரும் விருப்பம் போலக் குடித்தபின்தான் தரம் குறைந்த இரசத்தைப் பரிமாறுவர். நீர் நல்ல இரசத்தை இதுவரை பரிமாறாமல் ஏன் வைத்திருந்தீர் என்று கேட்டார் என இவ் அரும் அடையாளம் அமைந்துள்ளது.

**தலைவன் தொட்டதால் தண்ணீர் சிவந்தது**

திருமண வீட்டில் குறை ஏற்பட்டால் அதை உடனடியாக யாருக்கும் தெரியாமல் முதலில் நிவர்த்தி செய்பவள் தாய் எனலாம். அதுபோல அத்திருமண வீட்டின் அவமானத்தை இயேசுவின் தாய் அவரது மகனின் வழியாகத் தீர்த்து வைக்கிறாள். **"ஆதியிலே தண்ணீர்மீது கடவுளின் ஆவியானவர் அசைவாட அனைத்துலகும் தோன்றியதுபோல் புதியதொரு உலகை இயேசு உருவாக்கியதும் கானவின் தண்ணீரில் தொடங்குகின்றது"[7]** என்கின்ற அரும் அடையாளம் இயேசுவுக்கு முதன்மையானதாகவும் இதுவே இறைப்பணியின் துவக்கமாகவும் அமைந்தது. ஒரு செயலைச் செய்து முடிப்பவரிடம்தான் மிகப் பெரிய பொறுப்பை ஒப்படைக்க முடியும் என்பதைப் போல,

**"இதனை இதனான் இவன்முடிக்கும் என்றாய்ந்து**
**அதனை அவன்கண் விடல்"[8]**

ஒரு செயலை எப்படிச் செய்து முடிப்பார் என்பதை அறிந்து அவரிடம் அச்செயலை ஒப்படைக்க வேண்டும் என்னும் வள்ளுவனின் வாக்கிற்கேற்ப தந்தையாம் இறைவனும் இயேசுவின் தாயும் நன்கு அறிந்திருந்ததால் தண்ணீரை திராட்சை இரசமாக்கும் செயல் இயேசுவிடம் ஒப்படைக்கப்பட்டது எனலாம். இப்படி ஒப்படைத்த செயலை சரியாகச் செய்து முடித்தார் என்பதற்கு இந்த அரும் அடையாளம் சான்றாகத் திகழ்கின்றது.

இந்த அரும் அடையாளத்தில் திராட்சை இரசம் தரமானதாகவும் தாராளமாகவும் இருந்தது போல மற்றவருக்குச் செய்யும் உதவி என்னும் அறப்பண்பு மேலோங்கித் தரமானதாகவும் தாராளமாகவும் இருத்தல் வேண்டும் என்பதை அறியமுடிகிறது.

**அப்பமும் மீனும்**

ஐயாயிரம் பேருக்கு உணவு அளித்தல் (மத் 14:13-21), (மாற் 6:30-44), (லூக் 9:10-17), (யோவா 6:1-14) என்னும் அரும் அடையாளம் நான்கு நற்செய்திகள் காணப்பட்டாலும் இதன் மையக் கருத்து ஒன்றாகத்தான் அமைந்துள்ளது. இயேசுவும் அவரின் சீடர்களும் படகேறிப் பாலைநிலத்தில் உள்ள தனிமையான ஓர் இடத்திற்குச் சென்றார்கள். அவர்கள் புறபட்டுப் போவதை மக்கள் பார்த்தார்கள். பலர் அவர்களை இன்னாரென்று தெரிந்து கொண்டு எல்லா நகர்களிலிருந்தும் கால்நடையாகவே கூட்டமாய் ஓடி, அவர்களுக்கு முன் அங்கு வந்து சேர்ந்தனர்.

அவர் கரையில் இறங்கியபோது பெருந்திரளான மக்களைக் கண்டார். அவர்கள் ஆயரில்லா ஆடுகளைப்போல் இருந்ததால் அவர்கள்மீது பரிவு கொண்டு அவர்களுக்குப் பலவற்றைக் கற்பித்தார். இதற்குள் வெகுநேரமாகிடவே, சீடர் அவரிடம் வந்து இவ்விடம் பாலைநிலம் ஆயிற்றே ஏற்கனவே நெடுநேரம் ஆகிட்டது. சுற்றிலுமுள்ள பட்டிகளுக்கும் ஊர்களுக்கும் சென்று உண்பதற்கு ஏதாவது அவர்களே வாங்கிக்கொள்ளுமாறு நீர் மக்களை அனுப்பிவிடும் என்றனர். அவர் அவர்களிடம் நீங்களே அவர்களுக்கு உணவு கொடுங்கள் என்று பதிலளித்தார். அவர்கள் நாங்கள் போய் இருநூறு தெனாரியத்திற்கு அப்பம் வாங்கி இவர்களுக்கு உண்ணக் கொடுக்க வேண்டும் என்கீறீரா? என்று கேட்டார்கள். அப்பொழுது அவர் உங்களிடம் எத்தனை அப்பங்கள் இருக்கின்றன? போய்ப் பாருங்கள் என்று கூற அவர்களும் பார்த்துவிட்டு ஐந்து அப்பங்களும் இரண்டு மீன்களும் உள்ளன என்றார்கள். அவர் எல்லாரையும் பசும்புல் தரையில் அமரச் செய்யும்படி சீடர்களைப் பணித்தார்.

மக்கள் நூறு பேராகவும் ஐம்பது பேராகவும் வரிசை வரிசையாய் அமர்ந்தனர். அவர் **"ஐந்து அப்பங்களையும் இரண்டு மீன்களையும் எடுத்து வானத்தை அண்ணாந்து பார்த்து கடவுளைப் போற்றி அப்பங்களைப் பிட்டு அவர்களுக்குப் பரிமாறுவதற்காகத் தம் சீடரிடம் கொடுத்தார்"**[9] பின்பு சீடர்கள் மக்களுக்குக் கொடுத்தார்கள். அனைவரும் வயிறார உண்டனர். பின் **"எஞ்சிய அப்பத் துண்டுகளையும் மீன் துண்டுகளையும் பன்னிரண்டு கூடைகள் நிறைய எடுத்தனர்"**[10] எனத் திருவிவிலியத்தின் வழியாக அறிய முடிகிறது.

இதேபோல் மற்றொரு அரும் அடையாளமாக நாலாயிரம் பேருக்கு உணவு அளித்த நிகழ்வு மத்தேயு (மத்15:32-39), (மாற் 8:1-10) என இரு நற்செய்திகளில் மட்டுமே காணப்படுகிறது. இதில் **"ஏழு அப்பங்களும் சில மீன்களும் இருந்தன அவற்றைக்கொண்டு**

**நாலாயிரம் பேருக்கு உணவு அளித்தார். அவர்கள் உண்டபின் மீதியிருந்த துண்டுகளை ஏழு கூடைகள் நிறைய எடுத்தனர்”[11]** என்று குறிப்பிடுகிறது.

**பரிவும் பகிர்வும்**

இவ்விரு அரும் அடையாளங்களில் இயேசு உணவு அளிப்பதற்குக் காரணம் பரிவு என்னும் மாபெரும் அறப்பண்பு எனலாம். **”பரிவு என்றாலே அது செயல் வடிவில் வெளிப்படும்போதுதான் சிறப்படைகிறது”[12]** என்கிறார் குமார் ராஜா. இப்படி செயல்வடிவம் பெற்றவைதான் மேற்குறிப்பிட்ட இரு அரும் அடையாளங்கள். மக்கள் ஆயரில்லா ஆடுகள் போல் இருந்ததைக் கண்டு **”நான் இம்மக்கள் மீது பரிவு கொள்கிறேன்”[13]** என்றார் இயேசு. இப்பரிவினால் அவர்களுக்குப் பலவற்றைக் கற்பித்ததோடு வயிறார உணவும் கொடுத்து வந்தார் என்பதை அறியமுடிகிறது. இது புதிய ஏற்பாட்டில் மட்டுமல்லாது பழைய ஏற்பாட்டிலும் தொடர்ந்து காணப்படுகிறது. சில நேரங்களில் மனிதன் தன் இயலாமையால் அறமற்ற செயல்கள் புரிந்தாலும் அவற்றைப் பொருட்படுத்தாது **”பரிவு என்னும் கட்டுகளால் அவர்களைப் பிணைத்து அன்புக் கயிறுகளால் கட்டி நடத்தி வந்தேன். அவர்கள் பக்கம் சாய்ந்து உணவு ஊட்டினேன்”[14]** என்றும் **”நீர் உம் மக்களுக்குப் பரிவு காட்டினீர். சுவை மிகுந்த அரிய உணவாகிய காடைகளை அவர்களுக்கு உண்ணக் கொடுத்தீர்”[15]** என்றும் **”எங்கள் கடவுளே நீர் பரிவும் உண்மையும் பொறுமையும் உள்ளவர்”[16]** இதற்கு நாங்களே சாட்சிகள் என்று சான்று பகிர்ந்தனர் என சாலமோனின் ஞானநூல் சான்று பகர்கின்றது.

**”சாப்பிடுவது என்பது வயிற்றை நிரப்புகிற ஒரு செயல்பாடு மட்டுமல்ல. அது மற்றவர்களோடு பகர்ந்துகொள்கிற மனப்பான்மையும் குறிப்பிடுவதாகும்”[17]** என்பதை மெய்பிக்கும் நிலைதான் இப்புதுமையில் மக்கள் வயிறார உண்டபின் பல கூடைகள் நிறைய உணவு எஞ்சியது என்பதன் காரணம் தம்மிடம் உள்ளதைப் பகிர்ந்து கொள்ளும்போது பன்மடங்காகப் பெருகும் என்ற உண்மையை உணர்த்துகின்றது.

இந்த உணவுப் பகிர்தலை பல இலக்கியங்கள் முன்வைத்தாலும் அறத்தினையே முன்வைத்து பேசும் திருவள்ளுவர் 225, 226, 227 கீழ்க்காணும் குறள்களில் குறிப்பிடுகிறார்.

**”ஆற்றுவார் ஆற்றல் பசிஆற்றல் அப்பசியை**
**மாற்றுவார் ஆற்றலின் பின்”[18]**

பசியைப் பொறுத்துக் கொள்ளும் நோன்பைக் கடைப்பிடிப்பதைக் காட்டிலும் பசித்திருக்கும் ஒருவருக்கு உணவு அளிப்பதே சிறந்த அறப்பண்பாகும் என்றும்,

**"அற்றார் அழிபசி தீர்த்தல் அஃதுஒருவன்**

**பெற்றான் பொருள்வைப் புழி"[19]**

பட்டினி எனச் சொல்லி வந்தவரின் பசியைத் தீர்ப்பது வீண் போகாது அதுவே தான் தேடிய பொருளைப் பிற்காலத்தில் உதவுவதற்கு ஏற்பச் சேமித்து வைக்கக்கூடிய கருவூலம் ஆகும்.

**"பாத்தூண் மரீஇ யவனைப் பசிஎன்னும்**

**தீப்பிணி தீண்டல் அரிது"[20]**

பகிர்ந்து உண்ணும் பழக்கம் உடையவர்களைப் பசியென்னும் கொடிய நோய் அணுகுவதில்லை என்று உணவுப் பகிர்தலைக் குறிப்பிடுகிறார் என்பதை அறியமுடிகிறது.

அப்பமும் மீனும் என்னும் இரு அரும் அடையாளங்களின் வழியாகப் பரிவு என்னும் அறப்பண்பு பகிர்வு வழியாக செயல்வடிவம் பெறுகின்றது என அறியமுடிகிறது.

இவ்வாறு உணவு சார்ந்த அரும் அடையாளங்களின் வழியாக உணவு பகிரும்போது உறவும் பகிரப்படுகிறது என்பதை அறியமுடிகிறது. இத்தகைய உறவில் பல்வேறு அறப்பண்புகள் மனித வாழ்வுக்கு வழிவகுக்கின்றன என்பதைத் திருவிவிலியத்தின் மூலம் அறியமுடிகிறது.

**மதிப்பீடு**

- அரும் அடையாளங்கள் என்றால் ஐம்பூதங்களுக்கு அப்பாற்பட்டு நடக்கின்ற ஒரு செயலை ஐம்புலன்களால் உணர்ந்து நம்பிக்கையின் அடிப்படையில் புரிந்துகொள்வதோடு அரும் அடையாளம் என்னும் சொல்லுக்கு புதுமை எனவும் பொருள் கொள்ளப்படுவதை அறியமுடிகிறது.
- இயேசு 35 அரும் அடையாங்களை நிகழ்த்தியுள்ளார் எனவும் அவற்றை ஐந்து நிலைகளாக வகைமைப்படுத்தலாம் எனவும் அறியமுடிகிறது.
- உணவு என்பது உடலையும் உயிரையும் பேணிக்காப்பதோடு உறவை வளர்க்கிறது என்பதை அறியமுடிகிறது.
- இயேசு உணவு சார்ந்த அரும் அடையாளங்களின் வழியாக உதவி, பகிர்வு, பரிவு என்னும் மேலான அறப்பண்புகளை நிலைநாட்டுகின்றார் என்பதை அறியமுடிகிறது.

**சான்றெண் விளக்கம்**

1) அ. பீட்டர் அபீர், நற்செய்தி அறிமுகம், ப. 95.
2) பவுல் லியோன், யார் இந்த இயேசு, ப. 51.
3) எஸ். ஜே. அந்தோணிசாமி, யார் இந்த இயேசு கிறிஸ்து, ப. 89.
4) பவுல் லியோன், யார் இந்த இயேசு, ப. 52.
5) லிப்கோ தமிழ் – தமிழ் – ஆங்கிலப் பேரகராதி, ப. 724.
6) சுந்தர ஆவுடையப்பன், இறையன்புவின் சிந்தனை வானம், ப. 34.
7) மிக்கேல் இருதயம், வந்து பாருங்கள், ப. 36.
8) புலியூர்க் கேசிகன், திருக்குறள் பரிமேலழகர் உரை, ப. 242.
9) மத்தேயு, மத்தேயு நற்செய்தி, புதிய ஏற்பாடு, திருவிவிலியம், ப. 25.
10) மேலது, ப. 25.
11) மேலது, ப. 27.
12) குமார் ராஜா, இறைமொழி மருந்து, ப. 190.
13) மத்தேயு, மத்தேயு நற்செய்தி, புதிய ஏற்பாடு, திருவிவிலியம், ப. 27.
14) ஓசேயா, பழைய ஏற்பாடு, திருவிவிலியம், ப. 1077.
15) சாலமோனின் ஞானம், பழைய ஏற்பாடு, திருவிவிலியம், ப. 1231
16) மேலது, ப. 1229.
17) சுந்தர ஆவுடையப்பன், இறையன்புவின் சிந்தனை வானம், ப. 121.
18) புலியூர்க் கேசிகன், திருக்குறள் பரிமேலழகர் உரை, ப. 102.
19) மேலது, ப. 103.
20) மேலது, ப. 103.